**கெகிராவ பிரதேச சபை - 2020**

--------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கெகிராவ பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள் ' உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கெகிராவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) வட மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வழங்கப்பட்ட 2019\02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் புதிய கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குருணிக்கல் வீதிகளின் திருத்த வேலைகளுக்காக கெகிராவ பிரதேச செயலகத்தினால் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 23,689,384 ஆன மூலதன மானியமாக கருதாமல் பிரதேச சபையின் மீண்டெழும் செலவினமொன்றாகவும் மீண்டெழும் மானியமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சபைக்குரிய வீதி திருத்தம் செய்வதற்கு இச்செலவினம் மேற்கொள்ளப்பட்டுள் ளமையால் சபையின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சபையினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிறகுரிய சுற்றாடல் அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 260,000 ஆன விரிவான வருமானக் கூற்றில் வருமானமாகவும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் பெறவேண்டிய வருமானமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். | ஆண்டிற்குரிய சரியான வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மஹவெவ குடி நீர் செயற்திட்டத்திற்காக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கும் சுத்திகரிப்பு இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்கு 2019 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 1,725,178 தொகை அவ்வாண்டின் போது கடன்பட்டோராகவும் மூலதன மானியமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மீண்டும் மூலதன மானியமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | மீளாய்வாண்டிற்குரிய செலவினம் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் களியாட்ட வரி வருமானம் ரூபா 90,005 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 123,664 என ரூபா 33,659 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | சரியான வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கெகிராவ பால்சாலையிலிருந்து கிடைக்க வேண்டிய கடை வாடகை வருமானம் ரூபா 36,000 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுகளில் அது ரூபா 15,000 என ரூபா 21,000 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | ஆண்டிற்குரிய சரியான வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | சுடலைகூட வருமான பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் சுடலைகூட வருமானம் ரூபா 1,115,0000 ஆக இருந்த போதும் | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையொன்று உருவாகாமல் இருக்க பார்த்துக் | ஆண்டிற்குரிய சரியான வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 1,136,000 என ரூபா 21,000 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கொள்கின்றேன. |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்ளுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்கா சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| வுடமத்திய மாகாண உள்ளுராட்சிமன்ற ஆணையாளரின் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய NCP/LG/DE/04/04 /2020 ஆம் இலக்க கடிதம் | சபையின் இயந்திர உபகரணங்கள் கடன் அடிப்படையில் வாடகைககு வழஙங்ககூடாதென ஆலோசணை வழங்கியிருக்கையில் சபையின் 04 இயந்திரங்கள் 240 சந்தர்ப்பங்களின் போது கடன் அடிப்படையில் வழங்கியமையால் பெறவேண்டிய இயந்திர வாடகை வருமானம் ரூபா 1,591,500 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். | வாகன வாடகை வருமானம் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 9,591,249 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 31,850,128 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி மற்றும் வரிகள்** | | |
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் காணப்பட்ட ரூபா 4,352,289 ஆன நிலுவை வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை | ஏற்றுக் கொள்கின்றேன். | நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடை வாடகை ரூபா 4,409,072 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இவ்வாடகையை அறவிடுவதற்கு பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் | பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் செயற்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**03. செயற்பாட்டு மீளாய்வு**

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கெகிராவ புதிய வர்த்தக கடைத் தொகுதியை நிர்மாணிக்கும் போது சபைக்குரிய மின்சார மானியை ஒப்பந்தக்காரரால் பயன்படுத்தியமையால் 2020 யூன் 20 ஆந் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 119,009 ஆன மின்சார பட்டியலை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு (ஒப்பந்தக்காரர்) மூலம் மீளளிப்புச் செய்வதற்கு சபை | ஏற்றுக் கொள்கின்றேன். | மின்சார பட்டியலை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | பிரதேச சபை அலுவலக கட்டிடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கேள்வி விளம்பரத்தை மேற்கொள்ளும் போது பத்திரிகை விளம்பரம் செய்யப்பட்டதால் சபைக்கு ரூபா 95,472 ஆன மேலதிக செலவினமொன்று இடம் பெற்றிருந்தது | ஏற்றுக் கொள்கின்றேன். | பத்திரிகை விளம்பரம் மேற்கொள்வதற்காக கையளிப்பதற்கு முன்னர் தேவைப்பாடு தொடர்பாக சரியாக உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அதிகாரப் பிரிவில் அமைந்துள்ள 05 கடைகளுக்காக ஓராண்டு மிகைத்த காலமாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமல் மூடி வைக்கப்பட்டிருந்தமையால் 2020 நவம்பர் 30 ஆந் திகதி வரை சபைக்கு 379,500 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக கொள்கின்றேன். | கடைகளை திருத்தம் செய்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அரச வங்கியொன்றில் நடைமுறைக் கணக்கில் (புறநெகும) ரூபா 5,752,291 தொகை விளைவற்று காணப்பட்டது. | ஏற்றுக கொள்கின்றேன | நிலைான வைப்புக்களாக முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,071,532 ஆன குத்தகை வாடகை வருமானம் மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன் | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2016 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 1,000,000 ஆன நிதி ஏற்பாடுகளில் நேர் உழைப்பின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட கெகிராவ ஆயுர்வேத வைத்தியசாலை | ஏற்றுக் கொள்கின்றேன் | நிர்மாண செயற்திட்டங்களில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு |

| | |
|---|---|
| கட்டிட நிர்மாண வேலைக்காக ரூபா 767,969 செலவிடப்பட்டிருந்த போதும் 2021 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை சுவர்களுக்கு பூச்சு பூசுதல், குளியறை ஸ்தாபித்தல், மின்சார முறைமை தாபித்தல் மற்றும் வழங்கலை வழங்குதல், நீர் வழங்கல் வழங்குதல், அலுமினியம் யன்னல் மற்றும் PVC கதவுகளை பொருத்துதல் உட்பட ரூபா 430,068 ஆன வேலைப் பகுதிகள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |